


சக்கர வியூகம்
SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்
PRGI NO: TNTAM/25/A1018




Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 227 | 09.2.2026 | MONDAY | THAI : 26 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 227 | 09.2.2026 | திங்கள்கிழமை | தை : 26 | விலை : ரூ.5/–

## தமிழக ரயில்வே திட்டங்களுக்கு

# “விரைந்து நிதி வழங்குக!”



## அமைச்சர் மூர்த்தியை வட்டமிடும் மதுரை மார்க்சிஸ்ட் கம்யூ., துணை மேயர்!

மதுரை: பிப்.9-

மதுரை மார்க்சிஸ்ட் கம்யூ., துணை மேயர் அமைச்சர் மூர்த்தியை வட்டமிடுவது திடீர் சலசலப்பைக் கிளப்பியுள்ளது.

வழக்கத்துக்கு மாறாக எப்போதும் இல்லாத வகையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த மதுரை மாநகராட்சி துணை மேயர் நாகராஜன், அமைச்சர் பி.மூர்த்தி பங்கேற்கும் நிகழ்ச்சிகளில் தவறாமல் பங்கேற்று வருகிறார். மாநகராட்சி கூட்டம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் துணை மேயர் தலைமையில் நடப்பதை விரும்பாததால் அதிருப்தியில் உள்ள திமுக கவுன்சிலர்களை சரிகட்டவே, அவர், அமைச்சரை சுற்றி வருகிறாரா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

மதுரை மாநகராட்சி திமுக மேயராக இருந்த இந்திராணி சொத்துவரி முறைகேடு விவகாரத்தில் பதவியை இழந்தார். மேயர் இல்லாததால் துணை மேயர் நாகராஜன், பொறுப்பு மேயராக ஒரு முறையாவது, மாநகராட்சி கூட்டத்தை ‘மேயர்’ அங்கி அணிந்து நடத்திட வேண்டும் என்று விரும்பினார். ஆனால், அவரது எண்ணத்திற்கு திமுக மேலிடம் முட்டுக்கட்டை போட்டுவந்ததால் மாநகராட்சி கூட்டம் நடத்தப்படாமல் இருந்து வந்தது. துணை மேயருக்கு ஆதரவாக ஒருவர் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததால் நீதிமன்றம் உத்தரவால் வரும் 10ம் தேதி மதுரை மாநகராட்சி மன்ற கூட்டம் நடக்க உள்ளது.

இக்கூட்டம் மதுரை மாநகராட்சியின் 45வது கூட்டமாகவும், பட்ஜெட் கூட்டமாகவும் வரும் 10ம் தேதி நடக்கிறது. துணை மேயர் நாகராஜன், பொறுப்பு மேயராக இக்கூட்டத்தை தலைமையேற்று நடத்த உள்ளதாகவும், தவறாமல் பங்கேற்க மாமன்ற செயலாளர் சித்ரா, அனைத்து கவுன்சிலர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பியிருந்தார்.

மேலும், இக்கூட்டத்தில் பேச விரும்பும் கவுன்சிலர்கள், தங்கள் கேள்விகளை சுருக்கமாக பேச அனுமதி வேண்டிய துணை மேயர் அலுவலகத்தில் விண்ணப்பித்தவர்கள் மட்டும் பேச அனுமதிக்கப்படுவார்கள் என்று கேட்டுக் கொள்ளப்பட்டனர். அதிருப்தியடைந்த திமுக கவுன்சிலர்கள், கேள்விகள் கேட்க 4 கவுன்சிலர்கள் கொண்ட துணை மேயர் அலுவலகத்தில் எழுதிக்கொடுக்க வேண்டுமா? என்று கொந்தளித்தனர்.

மேலும், கூட்டத்தில் வந்து கையெழுத்துப் போட்டுவிட்டு தொடர்ந்து பங்கேற்காமல் புறக்கணிக்க தற்போது வரை ஆலோசனை செய்து வருகிறார்கள். ஆனால், அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள், தற்போது வரை திமுக கவுன்சிலர்கள், இக்கூட்டத்தில் எப்படி பங்கேற்பது என்று எந்த வழிகாட்டுதலும் வழங்கவில்லை.

ஒட்டுமொத்தமாக திமுக கவுன்சிலர்கள், கையெழுத்துப் போட்டுவிட்டு சென்றுவிட்டால், கூட்டத்தை பொறுப்பு மேயராக தலைமையேற்று நடத்தும் கூட்டணி கட்சி துணை மேயரான தனக்கு தர்மசங்கடமாகிவிடும் என்று நாகராஜன் நெருக்கடியிலும், பரிதவிப்பிலும் இருப்பதாக கூறப்படுகிறது.

அதனால், திமுக கவுன்சிலர்கள் கூட்டத்தில் எந்த எதிர்ப்பும், நெருக்கடியும் கொடுக்காமல் அமைதியாக கூட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு துணை மேயர் நாகராஜன், அமைச்சர் பி.மூர்த்தி உதவியை நாடியுள்ளதாக கூறப்படுகிறது.

கடந்த காலங்களில் அமைச்சர் பி.மூர்த்தி பங்கேற்கும் அரசு விழாக்களில் தனக்கு உரிய கவுரவமும், முக்கியத்துவமும் தரப்படுவதில்லை என்று நெருக்கமானவர்கள் தனது ஆதங்கத்தையும், அதிருப்தியையும் தெரிவித்து அமைச்சர் நிகழ்ச்சிகளில் பங்கேற்பதை தவிர்த்து வந்தார். ஆனால், தற்போது அமைச்சர் பி.மூர்த்தி பங்கேற்கும் அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் நாகராஜன் தவறாமல் சென்று வருகிறார்.

ஆனால், அமைச்சர் பி.மூர்த்தியோ, துணை மேயர் நாகராஜனுக்கு பிடி கொடுக்காமல் இருந்து வருவதால் மாநகராட்சி கூட்டத்தில் திமுக கவுன்சிலர்கள் நடவடிக்கை எப்படியிருக்கும் என்று துணை மேயர் தரப்பினர் கலக்கத்தில் உள்ளனர். ஆனால், திமுக கவுன்சிலர்களிலே சிலர் துணை மேயருக்கு கூட்டத்தை எந்த சர்ச்சையும் இல்லாமல் நடத்தி முடிப்பதற்கு தேவையான ஆலோசனைகளையும், வழிகாட்டுதல்களையும் வழங்கி வருவதாக கூறப்படுகிறது.

அதனால், துணை மேயர் நாகராஜன், தான் ஆசைப்பட்டப்படி, ஒரு நாளாவது பொறுப்பு மேயராக மேயர் அங்கி அணிந்து மாநகராட்சி கூட்டத்தை பட்ஜெட் தாக்கலுடன், கவுன்சிலர்கள் விவாதத்துடன் முழுமையாக நடத்தி காட்டிட வேண்டும் என்று திட்டமிட்டு அதற்கான வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளார்.

ஆனால், திமுக கவுன்சிலர்கள், முழு நேரமும் கூட்டத்தில் இருப்பார்களா? அல்லது கையெழுத்துப் போட்டுவிட்டு எழுந்து சென்றுவிடுவார்களா? என்பது தற்போது வரை தெரியவில்லை. இதனால், வரும் 10ம் தேதி நடக்கவிருக்கும் மாநகராட்சி கூட்டம், பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது.

சென்னை: பிப்.9-

தமிழ்நாட்டில் ஒன்றிய அரசினால் அனுமதிக்கப்பட்ட ரயில்வே திட்டங்களுக்குத் தேவையான நிதியைத் தாமதமின்றி முழுமையாக முன்னுரிமை அடிப்படையில் விடுவித்திடவும், நிறுத்தி வைக்கப்பட்டுள்ள முக்கியமான திட்டங்களை மீண்டும் தொடங்கிடவும், தமிழ்நாட்டிற்குக் கூடுதலாக புதிய திட்டங்களை அனுமதித்திடவும் உரிய அறிவுரைகளை ரயில்வே அமைச்சகத்திற்கு வழங்கிட வலியுறுத்தி முதல்வர் ஸ்டாலின், பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

தமிழ்நாட்டில் ஒன்றிய அரசினால் நிறைவேற்றப்பட்டு வரும் ரயில்வே திட்டங்களின் தற்போதைய நிலை குறித்து தெரிவித்து, நிலுவையில் உள்ள பிரச்சினைகளுக்கு, குறிப்பாக, நிலம் கையகப்படுத்துதலுக்கான நிதியை முறையாக விடுவித்தல் மற்றும் கிடப்பில் போடப்பட்டுள்ள திட்டங்களை மீண்டும் தொடங்குதல் போன்றவற்றில் பிரதமர் தலையிட்டு உரிய நேரத்தில் தீர்வு காணவேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளதோடு, ஊடகங்களில் இதுதொடர்பாக பரவி வரும் உண்மைக்குப் புறம்பான சில செய்திகளுக்காகவும் இக்கடிதத்தினை தான் எழுதுவதாக முதல்வர் குறிப்பிட்டுள்ளார்.

கடிதத்தின் விவரம்: தமிழ்நாட்டில், ஒன்றிய அரசின் பல்வேறு ரயில்வே திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக 2500.61.06 ஹெக்டேர் பரப்புள்ள நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதில் 931.52.96 ஹெக்டேர் பரப்புள்ள நிலங்களுக்கு ரயில்வே துறை நிதியை ஒதுக்கவில்லை.

ரயில்வே துறையிடமிருந்து சமீபத்தில் திருத்தப்பட்ட நிலத் திட்ட அட்டவணை (LPS) பெறப்பட்ட இரண்டு திட்டங்களுக்குத் தேவையான நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு நிருவாக அனுமதி செயல்பாட்டில் உள்ளது. அது விரைவில் வழங்கப்படும்.

19 முக்கிய ரயில்வே திட்டங்களுக்கு நில எடுப்பு செய்யப்பட வேண்டிய 1273.05.15 ஹெக்டேர் பரப்புள்ள நிலங்களில், 1198.02.34 ஹெக்டேர் பரப்புள்ள நிலங்கள், அதாவது 94 விழுக்காடு நிலங்களைக் கையகப்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டு, அவை ரயில்வே துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இருப்பினும், ஐந்து திட்டங்களுக்கு ரயில்வே துறையால் நிலத் திட்ட அட்டவணை (LPS) இன்னும் வழங்கப்படவில்லை.



தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் முக்கியத் திட்டங்களான திண்டிவனம் நகரி அகல ரயில் பாதை, மதுரை தூத்துக்குடி அகல ரயில் பாதை, மணியாச்சி நாகர்கோவில் அகல ரயில் பாதை, கன்னியாகுமரி நாகர்கோவில் அகல ரயில் பாதை இரட்டிப்பாக்குதல், நாகர்கோவில் இரணியல் அகல ரயில் பாதை இரட்டிப்பாக்குதல், தூத்துக்குடி மதுரை (அருப்புக்கோட்டை வழி) புதிய அகல ரயில் பாதை (கட்டம்மி), சின்னசேலம் கள்ளக்குறிச்சி புதிய அகல ரயில் பாதை, மயிலாடுதுறை திருவாரூர் அகல ரயில் பாதை, பட்டுக்கோட்டை நான்கு முனை சந்திப்பு, புதிய அகல ரயில் பாதை (சேலம்கரூர் வழித்தடம் உருவாக்குதல்), மன்னார்குடி நீடாமங்கலம் அகல ரயில் பாதை, சென்னை கடற்கரை கொருக்குப்பேட்டை மூன்றாவது, நான்காவது வழித்தடம் மற்றும் விழுப்புரம் திண்டுக்கல் அகல ரயில் பாதை ஆகிய திட்டங்களுக்கு நிலம் கையகப்படுத்தும் பணிகள் முழுமையாக நிறைவடைந்துள்ளன.

மேலும், மீதமுள்ள திட்டங்களுக்கான நிலம் கையகப்படுத்தும் பணிகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நில எடுப்புப் பணிகளை முழுமையாக முடிப்பதற்கு நில உரிமையாளர்களுக்கு உரிய நேரத்தில் இழப்பீடு வழங்குவது மிக முக்கியம். துரதிர்ஷ்டவசமாக, ரயில்வே அமைச்சகத்தால் நிதியை விடுவிப்பதில் ஏற்படும் தாமதங்கள், தனிப்பட்ட திட்டங்களுக்குப் பெரும்பாலும் நிதியினை முழுமையாக வழங்காமல் பிரித்து வழங்குவது என்பது, தமிழ்நாட்டில் ரயில்வே திட்டங்களைச் செயல்படுத்துவதில் உள்ள முன்னேற்றத்தினைத் தடுத்து, தாமதங்களுக்கு வழிவகுத்துள்ளதாகவும், பாதிக்கப்பட்ட நில உரிமையாளர்களுக்கு நீடித்த நிச்சயமற்றதொரு நிலையை ஏற்படுத்தியுள்ளது.

'திருவனந்தபுரம் கன்னியாகுமரி இடையேயான அகல ரயில் பாதை இரட்டிப்பு' திட்டத்திற்கான 16.86.51 ஹெக்டேர் நில எடுப்புப் பணி முடிக்கப்படாமல் இருப்பது இதற்கு ஒரு பொருத்தமான உதாரணம். இத்திட்டத்திற்கான நில எடுப்பிற்கு உரிய இழப்பீடு வழங்குவதற்குத் தேவையான 289.78 ரூபாய் கோடி நிதியினை ரயில்வே துறை இன்னும் ஒதுக்கவில்லை. இது தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் ஒரு பெரிய திட்டம். இது ஒன்றிய அரசின் திட்டக் கண்காணிப்புக் குழுவின் (றிவிநி) வலைதளத்தின் மூலம் கண்காணிக்கப்படுகிறது.

நிலம் கையகப்படுத்துதலுக்கான நிதியை பகுதி, பகுதியாக வழங்குவதற்குப் பதிலாக, மொத்தமாக, சரியான நேரத்தில் ஒதுக்குவதன் மூலம், இந்த முக்கியமான திட்டங்களைத் தடையின்றி விரைவாக முடிக்க முடியும்.

தமிழ்நாடு அரசு, ரயில்வே திட்டங்களுக்கு உயரிய முன்னுரிமை அளித்து, வலுவானதொரு கண்காணிப்பு வழிமுறையினை ஏற்படுத்தியுள்ளது. திட்டங்களைச் செயல்படுத்துவதில் உள்ள சிக்கல்களைத் தீர்க்கவும், நிலுவையில் உள்ள திட்டங்களுக்கு நிலம் கையகப்படுத்துவதை விரைவுபடுத்தவும், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளரும், போக்குவரத்துத் துறை செயலாளரும் ரயில்வே அதிகாரிகளுடன் தொடர்ந்து மாதாந்திர ஒருங்கிணைப்பு கூட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்தத் தருணத்தில், சமீபத்திய ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு புதிய ரயில்வே திட்டங்களுக்கான ஒதுக்கீடு ஒப்பீட்டளவில் குறைவாக இருப்பது கவலையளிக்கிறது.

இந்திய அளவில் இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாகவும், உற்பத்தி மற்றும் தொழில்துறை வளர்ச்சிக்கான முக்கிய மையமாகவும் விளங்கும் தமிழ்நாடு, தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்குத் தொடர்ந்து கணிசமான பங்களிப்பை வழங்கி வருகிறது.

மேம்பட்ட ரயில் இணைப்பு மற்றும் உள்கட்டமைப்பு மூலம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை மேலும் வலுப்படுத்தும் மகத்தான ஆற்றலை தமிழ்நாடு கொண்டுள்ளது.

மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, நில எடுப்பு மற்றும் இழப்பீடு வழங்குவதை விரைவுபடுத்திட ஏதுவாக, அனுமதிக்கப்பட்ட திட்டங்களுக்குத் தேவையான நிதியை தாமதமின்றி, முழுமையாக, முன்னுரிமை அடிப்படையில் விடுவிக்கவும்;

ரயில்வே துறையால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள முக்கியமான திட்டங்களான தூத்துக்குடிமதுரை (அருப்புக்கோட்டை வழியாக) புதிய அகலப்பாதை மற்றும் திண்டிவனம்திருவண்ணாமலை அகலப்பாதை (ஏற்கெனவே 931.52.96 ஹெக்டேர் நிலத்தைக் கையகப்படுத்த நிர்வாக அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன) திட்டங்களை மீண்டும் தொடங்கிடவும், இதற்குத் தேவையான நிதியினை வழங்கிடவும்;

தமிழ்நாட்டின் பொருளாதார நிலை மற்றும் வளர்ச்சித் தேவைகளுக்கு ஏற்ப, கூடுதலாக புதிய இரயில் திட்டங்களை அனுமதிப்பது குறித்து பரிசீலித்திடவும், பிரதமர் தலையிட்டு, ரயில்வே அமைச்சகத்திற்கு உரிய அறிவுரைகளை வழங்கிட வேண்டும். இவ்வாறு முதல்வர் தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும், பிரதமரின் தலையீடு, கூட்டுறவுக் கூட்டாட்சித் தத்துவத்தை வலுப்படுத்துவதோடு, ஒன்றிய மற்றும் மாநில அரசின் நலனைக் கருத்தில் கொண்டு, இந்தப் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்க உதவிடும் என முதல்வர் தனது கடிதத்தில் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், ரயில்வே திட்டங்களை விரைவாக நிறைவேற்றுவதற்குத் தேவையான அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்க தமிழ்நாடு அரசு முழுமையாக உறுதிபூண்டுள்ளது என்று தெரிவித்துள்ள முதல்வர், இதுதொடர்பாக பிரதமரிடமிருந்து விரைவில் சாதகமான நடவடிக்கையை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.

## கீழக்கோட்டை அருள்மிகு சித்தி விநாயகர் கோவில் மகா கும்பாபிஷேகம் அமைச்சர் பெரியசாமிக்கு பரி வட்டம் கட்டி வரவேற்பு

சின்னாளபட்டி, பிப்.9

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டி கீழக்கோட்டை பகுதியில் அமைந்துள்ளது அருள்மிகு ஸ்ரீ சக்தி விநாயகர் திருக்கோவில். சித்தி விநாயகர் கோவிலில் மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு, கணபதி பூஜை உடன் விழா தொடங்கியது. ஞாயிற்றுக்கிழமை காலை 7:00 மணி அளவில் சிவாச்சாரியார்கள் கோபுர கலசத்திற்கு புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகத்தை நிறைவு செய்தனர்.

கும்பாபிஷேக விழாவில் கலந்து கொள்ள வந்த ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் பெரியசாமி அவர்களுக்கு கோவில் கமிட்டி தலைவர் ஜி சரவணன் செயலாளர் சந்திரசேகர்( ராசு பண்டாரம் )பொருளாளர் அய்யாதுரை , நிர்வாக கமிட்டி சேர்ந்த பேராசிரியர் பாண்டி, கருணாகரன்( சுகாதார அலுவலர்) செல்லப்பா, ராஜலிங்கம் சிவா தலைமையில் அமைச்சரை பெரியசாமி அவர்களுக்கு பிரம்மாண்டமான மாலை சால்வை,அணிவித்து பரி வட்டம் கட்டி உற்சாகமாக வரவேற்றனர் அதன் பின்னர் அமைச்சரை பெரியசாமி அவர்கள் கமிட்டியாளர்களிடம் நிதி வழங்கினார்.



# “வங்கதேச இந்துக்கள் போராட முடிவு செய்தால் உலகளவில் ஆதரவு கிட்டும்” மோகன் பாகவத்



மும்பை, பிப்.9-

வங்கதேசத்தின் 1.25 கோடி இந்து மக்கள் தங்கள் உரிமைக்காக போராட முடிவு செய்தால் அவர்களுக்கு ஆதரவாக உலக நாடுகளில் உள்ள இந்துக்கள் நிச்சயம் உதவுவார்கள் என ஆர்எஸ்எஸ் தலைவர் மோகன் பாகவத் பேசியுள்ளார்.


கடந்த சில மாதங்களாக வங்கதேசத்தில் உள்ள இந்துக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. இதில் அடுத்தடுத்து தொழிலதிபர்கள், தொழிலாளர்கள், மாணவர்கள் என பலர் கொலை செய்யப்பட்டு வருகின்றனர். அந்த நாடு முழுவதும் இந்த போக்கு நீடிக்கிறது. இந்த சூழலில் வங்கதேசத்தில் நெருக்கடி நிலையில் இந்துக்கள் குறித்து மும்பையில் நடைபெற்ற ஆர்எஸ்எஸ் நிகழ்வில் அதன் தலைவர் மோகன் பாகவத் கூறியதாவது:

“வங்கதேசத்தில் சுமார் 1.25 கோடி இந்துக்கள் உள்ளனர். அவர்கள் அங்கு இருக்கவும், தங்கள் உரிமைக்காக போராடவும் முடிவு செய்தால் உலகம் முழுவதும் உள்ள இந்துக்கள் அவர்களுக்கு உதவுவார்கள்.

இந்திய நாட்டில் மக்கள் தொகை சார்ந்த விவகாரத்தில் அரசு இப்போது கவனம் செலுத்தி வருகிறது. குறிப்பாக சட்டவிரோத குடியேற்றத்தில் அரசு மேற்கொண்டு வரும் முயற்சி வெற்றி பெறும். இந்தியா பலம் வாய்ந்தது. ஆர்எஸ்எஸ் நிதி குறித்து அறிய மக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். நாங்கள் எங்கள் உறுப்பினர்களிடம் இருந்து நிதி பெறுகிறோம். நாங்கள் விடுதிகளில் தங்குவதில்லை, ஆர்எஸ்எஸ் உறுப்பினர்களின் வீடுகளில் தங்குகிறோம்.

எந்த சமூகத்தை சேர்ந்தவரும் ஆர்எஸ்எஸ் தலைவர் ஆகலாம். நாங்கள் அனைத்து சமூக மக்களுக்காகவும் பணியாற்றி வருகிறோம். சமூகத்தை ஒன்றிணைப்பதுதான் எங்கள் நோக்கம்” என அவர் தெரிவித்தார்.

# செயற்கைக் கால்களைக் காட்டி அரசியல் வன்முறை பற்றி பேசிய கேரள எம்.பி. சதானந்தனுக்கு பிரதமர் மோடி பாராட்டு



புதுடெல்லி: , பிப்.9-

கேரளாவைச் சேர்ந்த நியமன எம்.பி. சதானந்தன் மாஸ்டர். கேரள பாஜக துணைத் தலைவராக இருக்கும் இவர், கேரளாவில் ஆசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றவர். கண்ணூர் மாவட்டத்தில் ஆர்எஸ்எஸ் இயக்கத்தில் தீவிரமாக செயலாற்றிய இவரை, மார்க்சிஸ்ட் கட்சியினர் 1994ம் ஆண்டு கடுமையாக தாக்கியதில் 2 கால்களையும் இழந்து செயற்கைக் கால்களைப் பொருத்தியுள்ளார்.

இவர் கடந்த வாரம் மாநிலங்களவையில் முதல் முறையாக பேசினார். அப்போது தனது செயற்கைக் கால்களைக் கழற்றி மேசையின் மீது வைத்து ஜனநாயகம் குறித்து பேசினார். இதுகுறித்து அவருக்கு கடந்த 6ம் தேதி எழுதிய கடிதத்தில் பிரதமர் மோடி கூறியிருப்பதாவது:

உங்கள் தைரியத்தை கேரளா நன்கறியும். பிற்போக்குக் கொள்கை உடையவர்கள் நடத்திய தாக்குதலால் பாதிக்கப்பட்டோர் நாட்டில் பலர் உள்ளனர். நீங்கள் அமைதியான முறையில் உங்கள் கருத்துக்களை முன் வைத்ததைப் பாராட்டுகிறேன். நீங்கள் நாடுதான் முதலில் என்ற உறுதி மற்றும் கொள்கையை கொண்டு வந்துள்ளீர்கள். செயற்கைக் கால்களை நீங்கள் மேசையில் கழற்றி வைத்து பேசியதை பார்த்து, இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும், நாட்டு மக்களும் அதிர்ச்சி அடைந்தனர்.

உங்களது பேச்சையும் சில எம்.பி.க்கள் கேலி செய்தனர். தற்போது பிற்போக்கு கொள்கைகள் வெகுவாக குறையத் தொடங்கியுள்ளது. திருவனந்தபுரத்துக்கு நான் சமீபத்தில் வந்த போது கேரள மக்கள் எனக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

இது கேரளாவில் ஐக்கிய ஜனநாயக முன்னணி (யுடிஎப்) மற்றும் இடதுசாரி ஜனநாயக முன்னணியின் செயல்பாடுகளால் மக்கள் வெறுப்படைந்துள்ளதை காட்டுகிறது.

அவர்கள் வளர்ச்சியடைந்த கேரளம் என்ற நமது தொலைநோக்கு பார்வையைப் பாராட்டுகின்றனர். மத்திய பட்ஜெட், கேரளாவுக்கு குறிப்பிடத்தக்க வகையில் பயனளிக்கும் என்பதால், நீங்கள் மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். இவ்வாறு பிரதமர் கூறியுள்ளார்.

# கன்னியாகுமரியில் இருந்து காஷ்மீருக்கு விவசாயிகள் சங்கத்தினர் யாத்திரை




நாகர்கோவில், பிப்.9-

அரசியல் சார்பற்ற ஐக்கிய விவசாயிகள் சங்கம் சார்பில், கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரையிலான விவசாயிகள் யாத்திரை நேற்று தொடங்கியது.

எம்.எஸ்.சாமிநாதன் குழு பரிந்துரையை நிறைவேற்ற வேண்டும். விவசாயிகள் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, 7 வாகனங்களில் 30 பேர் கொண்ட குழுவினர் காஷ்மீர் வரை யாத்திரை செல்கின்றனர்.

குமரி காந்தி மண்டபம் முன்புநேற்று தொடங்கிய யாத்திரை, நெல்லை மதுரை, சென்னை வழியாக பல்வேறு மாநிலங்களைக் கடந்து, வரும் மார்ச் 15ம் தேதி காஷ்மீரை அடைகிறது. மார்ச் 19ம் தேதி டெல்லி ராம்லீலா மைதானத்தில் லட்சக்கணக்கான விவசாயிகள் பங்கேற்கும் பேரணி நடைபெறுகிறது.

குமரியில் நடந்த தொடக்க நிகழ்ச்சியில் சங்கத்தின் தமிழக ஒருங்கிணைப்பாளர் பி.ஆர். பாண்டியன், தலைவர் அய்யாக்கண்ணு, குமரி மாவட்ட பாசனத்துறை தலைவர் வின்ஸ் ஆன்றோ உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். பின்னர் பி.ஆர்.பாண்டியன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: விவசாயிகளின் கடனை தள்ளுபடி செய்ய மத்திய அரசு மறுக்கிறது. ஆனால், கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு ரூ.14.5 லட்சம் கோடியை தள்ளுபடி செய்திருக்கிறது. விவசாயிகள் தற்கொலைதொடர்கிறது. விளை பொருட்களுக்கு லாபகரமான விலை கிடைக்கவில்லை.

2014 தேர்தலின்போது பாஜகவின் அறிக்கையில், எம்.எஸ்.சாமிநாதன் குழு பரிந்துரையை நிறைவேற்றுவதாகவும், விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்வதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இதுவரை அதை நிறைவேற்றவில்லை. ஐக்கிய விவசாயிகள் சங்கத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் ஜக்ஜித் சிங் தல்லேவால் தலைமையில் யாத்திரை தொடங்கப்பட்டுள்ளது. அனைத்து மாநிலங்களின் ஒப்புதலோடு, மத்திய அரசு விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும். யாத்திரையில் அனைத்து மாநிலப் பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர்.

அந்தந்த மாநிலங்களில் விவசாயிகள் மகாசபைக் கூட்டம் நடைபெற இருக்கிறது. இன்று மதுரையிலும், நாளை நாகையிலும், வரும் 10ம் தேதி காலையில் சேலத்திலும் மகாசபைக் கூட்டங்கள் நடைபெற இருக்கின்றன. அடுத்து கர்நாடகாவுக்குள் பேரணி பயணிக்கிறது. தமிழக முதல்வரை சந்திப்பதற்கு அனுமதி கோரி இருக்கிறோம். அவர் அனுமதி தந்தால் வரும் 9ம் தேதி சந்திப்போம். இவ்வாறு அவர் கூறினார்.

# “டிஎன்பிஎஸ்சி தேர்வைக்கூட நடத்த கையாலாகாத திமுக அரசு” பழனிசாமி கண்டனம்



சென்னை, பிப்.9-

“ஒரு தேர்வைக் கூட உருப்படியாக நடத்த வக்கில்லாத கையாலாகாத அரசு தான் உங்கள் திமுக அரசு. டிஎன்பிஎஸ்சி தேர்வு அது நடைபெறவிருந்த நாளன்று ஒத்திவைக்கப்படுவது தமிழக வரலாற்றில் இதுவே முதல் முறை.” என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், “தமிழ்நாடு முழுவதும் இன்று நடைபெறவிருந்த டிஎன்பிஎஸ்சி குரூப் 2, 2ஏ முதன்மைத் தேர்வானது, ஹால் டிக்கெட் மற்றும் தேர்வு மைய குளறுபடிகளால் ஒத்திவைக்கப்படுவதாக தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. திமுக ஆட்சியில் ‘நிர்வாகம்’ என்பது எந்த லட்சணத்தில் இருக்கிறது என்பதை, இந்த ஒரு நிகழ்வே வெளிச்சம் போட்டு காட்டிவிட்டது.

டிஎன்பிஎஸ்சி குரூப் 2 போன்ற அதிமுக்கியத்துவம் வாய்ந்த ஒரு தேர்வு, தேர்வு நாளன்று ஒத்திவைக்கப்படுவது தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே இதுவே முதல் முறை. அதுவும், பல இடங்களில் தேர்வர்கள் தேர்வு ஒத்திவைக்கப்பட்டதே தெரியாமல் தேர்வு எழுதியுள்ளனர் என்ற பேரதிர்ச்சியான செய்திகளும் வருகின்றன.

“தொழில்நுட்பக் கோளாறு (Technical Fault)” என ஒற்றை வரியில் தப்பிக்க முயலுகின்ற திமுக ஆட்சியாளர்கள், குரூப் 2 என்பது எவ்வளவு முக்கியமான தேர்வு?. அந்த Fault ற்கு பின்னால் தேர்வெழுதிய இளைஞர்களின் பல ஆண்டுகால உழைப்பும் நம்பிக்கையும் சிதைந்துள்ளது என்பதை மறந்துவிடாதீர்கள்.


தமிழ்நாட்டை "சூப்பர்ஸ்டார்" மாநிலமாக மாற்றிவிட்டதாக வாய்கிழிய மேடையில் பேசும் பொம்மை முதல்வர் ஸ்டாலின், ஒரு தேர்வைக் கூட உருப்படியாக நடத்த வக்கில்லாத கையாலாகாத அரசு தான் உங்கள் திமுக அரசு.

ஏற்கனவே 5.5 லட்சம் வேலைகளைத் தரப்போகிறோம் என 2021ல் கொடுத்த தேர்தல் வாக்குறுதி எல்லாம் காற்றில் பறந்துக்கொண்டு இருக்க, இருக்கின்ற தேர்வுகளைக் கூட ஒழுங்காக நடத்த வக்கற்ற திமுக அரசுக்கு எனது கடும் கண்டனம்.

டி.என்.பி.எஸ்.சி குரூப்2, 2ஏ தேர்வு குளறுபடிகளை அதிகாரிகள் மீது மட்டும் சுமத்தி , அவர்கள் மீது மட்டும் கண்துடைப்பு நடவடிக்கை எடுக்காமல் , இந்த தவறுகள் எதிர்காலத்தில் வராமல் இருக்க முறையான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்க ஸ்டாலின் மாடல் திமுக அரசை வலியுறுத்துகிறேன்.

தேர்வர்கள் அனைவரும் நம்பிக்கையோடு முயற்சிகளை தொடருங்கள், 2026ல் அமையவுள்ள அதிமுக அரசானது, இளைஞர்களின் கனவுகளை ஈடேற்றும் அரசாக இருக்கும்’ எனத் தெரிவித்துள்ளார்.

# இந்திய ஐ.டி. சேவைகளை ஏஐ சீர்குலைக்காது தொழில்நுட்ப துறை அமைப்பான நாஸ்காம் தகவல்



புதுடெல்லி, பிப்.9-

செயற்கை நுண்ணறிவால் (ஏஐ) இந்திய தொழில்நுட்ப (ஐ.டி.) சேவை துறை பாதிக்கும் என்ற கருத்து நிலவுகிறது. இதுகுறித்து தொழில்நுட்ப துறை அமைப்பான நாஸ்காம் கூறியதாவது:

இந்திய தொழில்நுட்ப சேவைகளை ஏஐ சீர்குலைக்காது. இத்துறையின் செயல்பாட்டையும், பங்களிப்பையும் ஏஐ மறுசீரமைத்து மேம்படுத்தும். ஆந்த்ரோபிக்கின் ‘கிளாட் கோவர்க்' போன்ற புதிய ஏஐ உபகரணங்கள், பல்வேறு பணிகளை தானியங்கி முறையில் செயல்பட வைக்கும். ஆனால், இந்திய ஐ.டி. சேவைகளை அது புறக்கணிக்காது. மாறாக அவற்றின் திறன்களை ஏஐ உபகரணங்கள் மேம்படுத்தும்.

சட்டம், விற்பனை, மார்க்கெட்டிங் மற்றும் தரவு பகுப்பாய்வு போன்ற துறைகளில் பணிகளைத் தானியங்கி முறையில் செயல்பட வைக்கும் ஏஐ கருவிகளால் இந்தியாவின் ஐ.டி. சேவை துறைக்கு பாதிப்பு ஏற்படும் என்ற கவலைகள் தவறானவை. சிக்கலான தொழில்நுட்ப சூழல்களுடன் செயல்படும் உலகளாவிய நிறுவனங்களுடன் இந்திய ஐ.டி. சேவை நிறுவனங்கள் இணைந்து பணியாற்றுகின்றன.

காலத்துக்கு ஏற்ப முன்னேறுவதற்கு, இந்திய ஐ.டி.நிறுவனங்கள் தங்களை மறுசீரமைக்கும் பணியை ஏற்கெனவே தொடங்கிவிட்டன. அதனால் ஏஐ வரவு ஐ.டி. துறையை சீர்குலைக்கும் என்ற கவலை தேவையற்றது. இவ்வாறு நாஸ்காம் தெரிவித்துள்ளது.

# எப்ஸ்டீன் தொடர்பான பாலியல் வன்கொடுமையில் அனில் அம்பானி பெயர்!

புதுடெல்லி, பிப்.9-


அமெரிக்காவின் நியூயார்க் நகரை சேர்ந்த பிரபல தொழிலதிபர் ஜெப்ரி எப்ஸ்டீன். புளோரிடா மாகாணம், பாம் பீச் பகுதியில் இருந்த அவருக்குச் சொந்தமான பண்ணை வீடுகளில் சிறுமிகள் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதாக கடந்த 2005ம் ஆண்டில் புகார்கள் எழுந்தன.

இதுதொடர்பான வழக்கில் ஜெப்ரிக்கு 13 மாதங்கள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. சிறையில் இருந்து அவர் வெளியே வந்த பிறகும் சிறுமிகளை கடத்தி பாலியல் தொழிலில் ஈடுபடுத்திய வழக்கில் கடந்த 2019ம் ஆண்டு ஜூலையில் அவர் மீண்டும் கைது செய்யப்பட்டார். கடந்த 2019 ஆகஸ்ட் 10ம் தேதி மான்ஹாட்டன் சிறையில் அவர் தற்கொலை செய்து கொண்டார்.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப், பல்வேறு உலக நாடுகளின் தலைவர்கள், அமெரிக்காவின் முன்னணி தொழிலதிபர்களுக்கு எப்ஸ்டீனுடன் நெருங்கிய தொடர்பு இருந்ததாகக் கூறப்படுகிறது. இவை தொடர்பான ஆவணங்கள், புகைப்படங்கள், வீடியோக்கள் அவ்வப்போது வெளியாகி அதிர்வலைகளை ஏற்படுத்தி வருகின்றன.

இந்த சூழலில் ஜெப்ரி தொடர்பான பாலியல் வன்கொடுமை விவகாரத்தில் இந்திய தொழிலதிபர் அனில் அம்பானியின் பெயரும் உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. கடந்த 2017, 2019ம் ஆண்டுகளில் அமெரிக்காவின் நியூயார்க் நகருக்கு அனில் சென்றார். அப்போது மான்ஹாட்டனில் உள்ள ஜெப்ரியின் வீட்டுக்கும் அவர் சென்றுள்ளார்.

கடந்த 2017ம் ஆண்டு மார்ச் 9ம் தேதி ஜெப்ரி மற்றும் அனில் இடையே நடைபெற்ற தகவல் பரிமாற்றத்தை அமெரிக்க ஊடகம் வெளியிட்டுள்ளது. “எனக்கான உங்களின் (ஜெப்ரி) பரிந்துரை என்ன'' என்று அனில் கேள்வி எழுப்ப அதற்கு ஜெப்ரி “உங்களுக்கு உயரமான சுவீடன் பெண் பொருத்தமாக இருப்பார்'' என்று ஜெப்ரி பரிந்துரைக்க, ‘‘உடனடியாக ஏற்பாடு செய்யுங்கள்'' என்று அனில் பதில் அளித்திருக்கிறார்.




# ‘ஆக்கிரமிப்பு காஷ்மீர், அக்சாய் சின் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி’ புதிய வரைபடம் வெளியிட்டது அமெரிக்கா

வாஷிங்டன், பிப்,9-

கடந்த 1947ல் இந்தியா, பாகிஸ்தான் பிரிவினையின் போது காஷ்மீரின் ஒரு பகுதியை பாகிஸ்தான் ஆக்கிரமித்தது. இதன் காரணமாக கடந்த 194748ம் ஆண்டில் இரு நாடுகளிடையே போர் நடைபெற்றது. ஐ.நா. சபையின் தலையீட்டால் போர் முடிவுக்கு வந்தது.

இன்றளவும் காஷ்மீரின் ஒரு பகுதி பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ளது. கடந்த 1963ம் ஆண்டில் ஆக்கிரமிப்பு காஷ்மீரின் 5,180 சதுர கி.மீ. பகுதியை சீனாவுக்கு பாகிஸ்தான் வழங்கியது. இந்தப் பகுதியை சீன அரசு, அக்சாய் சின் என்று அழைக்கிறது. ஆக்கிரமிப்பு காஷ்மீர் மற்றும் அக்சாய் சின் ஆகியவை இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி என்று மத்திய அரசு உறுதியாக கூறி வருகிறது.

இந்த சூழலில் இந்தியா, அமெரிக்கா இடையே வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாக இருப்பதை கவுரவிக்கும் வகையில் அமெரிக்க வர்த்தக பிரதிநிதி அலுவலகம் நேற்று சமூக வலைதளத்தில் ஒரு வரைபடத்தை வெளியிட்டது.

அதில் ஆக்கிரமிப்பு காஷ்மீர், அக்சாய் சின் ஆகியவை இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதிகளாக அடையாளமிடப்பட்டு உள்ளன. இதன்மூலம் பாகிஸ்தான், சீனாவுக்கு அமெரிக்க அரசு மறைமுகமாக எச்சரிக்கை விடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

# காஜியாபாத்துக்கு பிறகு அதிக மாசுபட்ட நகரம் டெல்லி

புதுடெல்லி, பிப்.9-

எரிசக்தி மற்றும் சுத்தமான காற்று ஆராய்ச்சி மையம் (CREA), ஜனவரிக்கான தனது பகுப்பாய்வு அறிக்கையை வெளியிட்டுள்ளது. இதன்படி, கடந்த ஜனவரியில் நாட்டில் காஜியாபாத்துக்கு பிறகு மிகவும் மாசுபட்ட 2வது நகரமாக டெல்லி இருந்துள்ளது.

டெல்லியில் ஒரு கன மீட்டருக்கு 169 மைக்ரோ கிராம் அளவுக்கு பிஎம் 2.5 துகள்கள் பரவியிருந்தன. இது இந்தியாவின் தேசிய காற்றுத் தரநிலை வரம்பைவிட இது கிட்டத்தட்ட 3 மடங்கு அதிகம். ஜனவரியில் காஜியாபாத் மிகவும் மாசுபட்ட நகரமாக இருந்தது. அங்கு ஒரு கன மீட்டருக்கு 184 மைக்ரோ கிராம் பிஎம் 2.5 துகள்கள் காணப்பட்டன.

# India-US Trade Deal: தேசிய அளவில் போராட்டத்துக்கு சம்யுக்த் கிசான் மோர்ச்சா அழைப்பு



புதுடெல்லி, பிப்.9-

இந்திய அமெரிக்க வர்த்தக கட்டமைப்பு இடைக்கால ஒப்பந்தத்துக்கு விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இதை வலியுறுத்தும் விதமாக வரும் 12ம் தேதி தேசிய அளவிலான போராட்டம் நடத்த உள்ளதாக சம்யுக்த் கிசான் மோர்ச்சா விவசாய அமைப்பு அறிவித்துள்ளது.

“இந்தியா மற்றும அமெரிக்கா இடையே இடைக்கால வர்த்தக ஒப்பந்தம் விரைவில் கையெழுத்தாக உள்ளது. இந்த ஒப்பந்தத்தால் இரு நாடுகளும் நிறைவான பலன்களை பெறும். குறிப்பாக இந்திய ஏற்றுமதியாளர்கள் அதிக பலன் அடைவார்கள்.

அமெரிக்காவின் மரபணு மாற்றப்பட்ட வேளாண் விளைபொருட்கள் இந்தியாவில் விற்பனை செய்ய அனுமதி வழங்கவில்லை. அமெரிக்காவின் சோளம், அரிசி, கோதுமை, ராகி, தானியங்களை இந்தியாவில் விற்பனை செய்ய எவ்வித சலுகையும் வழங்கவில்லை.

இந்தியாவில் வாழைப்பழம், ஆரஞ்சு, ஆப்பிள், மாம்பழம், கொய்யா, காளான், கோகோ, கடுகு எண்ணெய், அன்னாசி சாகுபடியில் ஈடுபடும் விவசாயிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. நலன்கள் முழுமையாக பாதுகாக்கப்படும். இந்தியாவில் இறைச்சி, கோழி இறைச்சி, பால் பொருட்கள், சோயாபீன், சர்க்கரை, தானியங்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு சிறிய பாதிப்பு கூட ஏற்படாது” என இருநாடுகளுக்கு இடையிலான ஒப்பந்தம் குறித்து சனிக்கிழமை அன்று மத்திய வர்த்தக, தொழில் துறை அமைச்சர் பியூஷ் கோயல் விளக்கினார்.

இந்த சூழலில் சம்யுக்த் கிசான் மோர்ச்சா நிர்வாகிகள் பத்திரிகையாளர்களை சந்தித்தனர். அப்போது அவர்கள் கூறியதாவது: இந்தியா அமெரிக்கா இடையிலான வர்த்தகம் சார்ந்த இடைக்கால ஒப்பந்தத்திற்கான கட்டமைப்பு, அமெரிக்க விவசாயத் துறையின் பன்னாட்டு நிறுவனங்களுக்கு சாதகமாக உள்ளது. இது அவர்களிடம் முழுவதுமாக சரணடைவதாகும். உலர்த்தப்பட்ட தானியக் கழிவுகள், கால்நடைத் தீவனத்திற்கான சிவப்பு சோளம், பதப்படுத்தப்பட்ட பழங்கள், சோயாபீன் எண்ணெய், ஒயின் உள்ளிட்ட மதுபானங்கள் ஆகியவை கூட்டறிக்கையில் சேர்க்கப்பட்டு இருப்பதைக் குறிப்பிட்டனர்.

மேலும், ஆப்பிள் மற்றும் பருத்தி சாகுபடியில் ஈடுபட்டுள்ள ஜம்மு காஷ்மீர், இமாச்சல, மகாராஷ்டிரா, குஜராத் மாநில விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள் என தெரிவித்தனர். இந்த இடைக்கால ஒப்பந்தத்தை கண்டித்து வரும் 12ம் தேதி தேசிய அளவிலான போராட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் விவசாயிகள், விவசாய சங்கங்கள் மற்றும் அமைப்புகள், தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் இந்தியா அமெரிக்கா இடையிலான இடைக்கால ஒப்பந்தத்தை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தவும் விவசாயிகள் முடிவு செய்துள்ளதாக தகவல்.



# அலங்காநல்லூரில் குறிஞ்சி சுகம் வட்டாரம் சுகம் அறக்கட்டளை இணைந்து வளரிளம் பெண்களுக்குதிறன் மேம்பாட்டு பயிற்சி

அலங்காநல்லூர் பிப் 09-

மதுரை மாவட்ட அலங்காநல்லூர் பகுதியில் குறிஞ்சி சுகம் வட்டாரம் மற்றம் சுகம் அறக்கட்டளை இணைந்து களஞ்சியம் அலுவலகத்தில் வளரிளம் பெண்களுக்கான முன் மாதிரி கல்வியாளர் திறன் மேம்பாட்டு பயிற்சி நடைபெற்றது. 200 வளர் இளம் பெண்கள் இப்பயிற்சியில் கலந்து கொண்டனர். வட்டார ஒருங்கிணைப்பாளர் வள்ளி, சுகம் வட்டார ஒருங்கிணைப்பாளர் வினோதினி,வட்டாரம் மற்றும் பயிற்சி நோக்கம் பற்றி விளக்கினார். மதுரை கிராமப்புறமண்டல சுகாதார திட்ட ஒருங்கிணைப்பாளர் முத்தையா, முன்மாதிரி கல்வியாளர் பொறுப்புகள் பற்றி கூறினார். யோகா பயிற்சியினர் விஜயலட்சுமி, வளரிளம் பெண்களுக்கு திறன்மேம்பாட்டு யோகா சொல்லிக் கொடுத்தார் பயிற்சிக்கான ஏற்பாட்டினை பயிற்சியாளர் மற்றும் தலைவிகள் இணைந்து செய்திருந்தனர். சுகம்வட்டார சுகாதார பணிய ாளர்ஐஸ்வர்யா,நன்றி தெரிவித்தார். மேலும் மண்டல சுகாதார திட்ட ஒருங்கிணைப்பாளர்.

முத்தையா வளரிளம் பெண்களுக்கான சுய சுகாதாரம், இரும்பு சத்து நிறைந்த ஊட்டச்சத்து உணவுகள் மற்றும் நல்ல தொடுதல், தவறான தொடுதல் குறித்து விழிப்புணர்வு செய்தார்.

# மத்திய அரசின் நடவடிக்கையால் சத்தீஸ்கரில் மாவோயிஸ்ட் அச்சுறுத்தலுக்கு முடிவு: குடியரசுத் தலைவர் முர்மு பாராட்டு



பஸ்தர், பிப்.9-

சத்தீஸ்கர் மாநிலம் பஸ்தரில், நடைபெறும் 3 நாள் பழங்குடியினர் கலாச் சார விழாவில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு நேற்று பங்கேற்றார். அப் போது அவர் பேசியதாவது:

இயற்கை எழில் மற் றும் வளமான கலாச்சாரத் துடன் கூடிய பஸ்தர் பகு தி, மக்களை எப்போதும் கவர்கிறது. ஆனால், இப் பகுதி பல ஆண்டு கால மாக மாவோயிஸ்ட்கள் அச்சுறுத்தலில் சிக்கியிருந் தது. இதனால் இங்குள்ள இளைஞர்கள், பழங்குடி யினருக்கு மிகுந்த பாதிப்பு ஏற்பட்டது.

தற்போது மாவோ யிஸ்ட்கள் வன்முறையை கைவிட்டு அமைதிப் பாதைக்கு திரும்பி வரு கின்றனர். மாவோயிஸ்ட் களுக்கு எதிராக மத் திய அரசு உறுதியான நடவடிக்கை எடுத்ததால், இங்கு அச்சுறுத்தல் முடிவுக்கு வந்துள்ளது.

மாவோயிஸ்ட்கள் அதிக எண்ணிக்கையில் சரணடைந்துள்ளனர். அமைதி வழிக்கு திரும் பும் மாவோயிஸ்ட்களுக்கு கவுரவமான வாழ்க்கையை மத்திய அரசு உறுதி செய் கிறது. மத்திய, மாநில அரசுகளின் முயற்சிகள், மக்களின் ஒத்துழைப்பு ஆகியவற்றால் பஸ்தரில் வளர்ச்சிக்கான புதிய விடியல் உதயமாகியுள் ளது. இவ்வாறு முர்மு கூறி னார்.

# தவெகவில் இணைந்த அதிமுக நிர்வாகி வி.எஸ்.பாபு



சென்னை, பிப்.9-

வட சென்னையின் மூத்த அரசியல்வாதியும், அதிமுக முன்னாள் மாவட்டச் செயலாளருமான வி.எஸ்.பாபு, தனது ஆதரவாளர்கள் மற்றும் நிர்வாகிகளுடன் தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் முன்னிலையில் அக்கட்சியில் இணைந்தார்.

முன்னதாக வட சென்னை திமுக மாவட்டச் செயலாளராக பதவி வகித்த வி.எஸ். பாபு, புரசைவாக்கம் சட்டப்பேரவைத் தொகுதியில் வெற்றி பெற்று எம்எல்ஏவாகவும் இருந்துள்ளார். பின்னர் முதல்வர் மு.க.ஸ்டாலின் மீதான அதிருப்தியின் காரணமாக அதிமுகவில் இணைந்த அவர், வட சென்னை வடக்குநீ மேற்கு மாவட்டச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில், அதிமுக பொதுச்செயலாளர். பழனிசாமியுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக, அவரது மாவட்டச் செயலாளர் பதவி பறிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இதனால் அதிருப்தியடைந்த வி.எஸ். பாபு, விஜய்யை சந்தித்து நேற்று தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தார். பின்னர், அவர் கூறுகையில், ‘‘அதிமுகவில் பழனிசாமி செயல்பாடுகள் பிடிக்காததால் தவெகவில் இணைந்தேன்’’ என்றார்.

# சென்னை, திருவள்ளூர், செங்கை உள்ளிட்ட 13 மாவட்டங்களில் நாளை பனிமூட்டம் நிலவ வாய்ப்பு!



சென்னை, பிப்.9-

தமிழகத்தில் நாளை சென்னை, சேலம் உள்ளிட்ட 13 மாவட்டங்களில் பனி மூட்டம் நிலவ வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறி யிருப்பதாவது: தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் நாளை முதல் பிப்.14 ம் தேதி வரை வறண்ட வானிலை நிலவக்கூடும்.

தமிழகத்தில் நாளை (பிப்.9) சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், ராணிபேட்டை, வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், ஈரோடு, திண்டுக்கல் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அதிகாலை வேளையில் மிதமான பனிமூட்டம் காணப்படும்.

பிப்.10 முதல் 12ம் தேதி வரை ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், ஈரோடு, திண்டுக்கல் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அதிகாலை வேளையில் மிதமான பனிமூட்டம் காணப்படும். தமிழகம், புதுச்சேரியில் நாளை முதல் பிப்.12ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் 2 டிகிரி செல்சியஸ் வரை படிப்படியாக உயரக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் மிதமான பனிமூட்டம் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 31 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 22 டிகிரி செல்சியஸை ஒட்டி இருக்கக்கூடும். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# மகாராஷ்டிரா கட்சிக்கும் கரும்பு விவசாயி சின்னம்என்ன செய்ய போகிறது நாம் தமிழர் கட்சி?




சென்னை, பிப்.9-

சட்டபேரவை தேர்தலையொட்டி போட்டியிடும் மற்றொரு கட்சிக்கும் விவசாயி சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளதால், சீமானுக்கு புதிய சிக்கல் உருவாகியுள்ளது.

கடந்த 2021 சட்டப்பேரவை தேர்தல் வரை ‘கரும்பு விவசாயி’ சின்னத்தில் களம் கண்டு வந்த நாம் தமிழர் கட்சிக்கு, கடந்த 2024 மக்களவைத் தேர்தலின் போது அந்தச் சின்னம் தேர்தல் ஆணையத்தால் மறுக்கப்பட்டது. முதலில் வருபவருக்கே முன்னுரிமை என்ற அடிப்படையில் ‘கரும்பு விவசாயி’ சின்னம் பாரதிய பிரஜா ஐக்கிய கட்சிக்கு ஒதுக்கப்பட்டதால், வேறு வழியின்றி அப்போது ஒலிவாங்கி (மைக்) சின்னத்தில் சீமான் போட்டி யிட்டார்.

புதிய சின்னத்தில் போட்டியிட்டாலும், அந்தத் தேர்தலில் 8.19 சதவீத வாக்குகளை அறுவடை செய்த நாதக, தேர்தல் ஆணையத்தின் விதிமுறைப்படி அங்கீகரிக்கப்பட்ட மாநில கட்சி என்ற அந்தஸ்தை எட்டியது.

இதைத் தொடர்ந்து, கடந்த 14 ஆண்டு காலப் போராட்டத் திற்குப் பிறகு நாதகவுக்கு ‘ஏர் கலப்பையுடன் கூடிய விவசாயி’ சின்னத்தை இந்திய தேர்தல் ஆணையம் கடந்த 2025 மே மாதம் ஒதுக்கி அறி வித்தது. இதனால், வரும் சட்டப்பேரவை தேர்தலில் சின்னத்தில் எவ்விதக் குழப்பமும் இன்றி தங்களது அரசியல் பயணத்தைத் தொடரலாம் என அக்கட்சியின் தொண்டர்களும் நிர்வாகிகளும் மிகுந்த உற்சாகத்தில் இருந்தனர்.

ஆனால், தற்போது மகாராஷ்டிராவைச் சேர்ந்த இந்தியக் குடியரசு கட்சிக்கு தேர்தல் ஆணையம் மீண்டும் ‘கரும்பு விவசாயி’ சின்னத்தை ஒதுக்கியிருப்பது நாதக வினரிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஒரே மாதிரியான பெயரைக் கொண்ட இரு சின்னங்கள் தேர்தல் களத்தில் இருப்பது வாக்காளர்களிடையே பெரும் குழப்பத்தை விளைவிக்கக் கூடும் என அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

குறிப்பாக, கிராமப்புற வாக்குச்சாவடி மின்னணு இயந்திரங்களில் ‘ஏர் கலப்பை விவசாயி’ மற்றும் ‘கரும்பு விவசாயி’ ஆகிய இரு சின்னங்களும் அருகருகே இடம்பெறும் பட்சத்தில், முதியவர்கள் மற்றும் போதிய விழிப்புணர்வு இல்லாத வாக்காளர்கள் யாருக்கு வாக்களிப்பது என்பதில் தடுமாற்றம் அடைய வாய்ப்புள்ளது.

கடந்த மக்களவைத் தேர்தலில் இத்தகைய குழப்பத்தால் ஒரு சில தொகுதிகளில் நாதக சில ஆயிரம் வாக்குகளை இழந்ததாகக் கூறப்படுகிறது. இதனால் தற்போது தங்கள் கட்சிக்கு கிடைத்துள்ள நிரந்தரச் சின்னமான ‘ஏர் கலப்பை விவசாயி’யை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் சீமான் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டுள்ளார்.

அங்கீகரிக்கப்பட்ட மாநிலக் கட்சி என்ற அந்தஸ்து ஒருபுறம் பலமாக இருந்தாலும், பழைய அடையாளமான ‘கரும்பு விவசாயி’ சின்னம் மற்றொரு கட்சிக்கு சென்றிருப்பது தேர்தல் களத்தில் நாதக வுக்கு புதிய சவாலாகவே பார்க்கப்படுகிறது. இதை சீமான் எப்படிச் சமாளிக்கப் போகிறார் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

விஜய்க்கு சீமான் அட்வைஸ்: சட்டப்பேரவை தேர்தலையொட்டி 234 தொகுதிகளுக்கும் நாம் தமிழர்கட்சி சார்பாக போட்டியிட தேர்வுசெய்யப்பட்டிருக்கும் வேட்பாளர்களுடனான கலந்தாலோசனை கூட்டம், சீமான் தலைமையில் போரூரில் நேற்றுநடைபெற்றது. பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: திருச்சியில் பிப்.21 நடைபெறும் மாநாட்டில் 234 தொகுதிகளுக்குமான வேட்பாளர்களை அறி விப்போம். புதுச்சேரிக்கு தனியாக அறிவிப்போம்.

மக்கள் எங்கு விரும்புகிறார்களோ அந்த தொகுதியில் நான் போட்டி யிடுவேன். முன்பு கூட தவெக தலைவர் விஜய் என்னிடம் கூட்டணியில் காங்கிரஸை சேர்த்து கொள்ளலாமா எனக் கேட்டார். காங்கிரஸ் கட்சியை சேர்த்து எந்த அரசியலை பேசமுடியும்? என அவரிடம் கேட்டேன். கச்சத்தீவு, காவிரி நதிநீர் உரிமை, மீத்தேன் எடுத்தல் என்ற பெயரில் நிலத்தை சுரண்டுதல் போன்றவற்றை பற்றியா பேசமுடியும்? இந்தியை திணித்தவர்களும் அவர்கள் தானே. விஜய் காங்கிரஸை சேர்த்து கொள்ள நினைக்கிறார். எங்களுக்கு தேசிய கட்சிகள், திராவிட கட்சிகளுடன் தேர்தல் உடன்பாடு இல்லை. இவ்வாறு அவர் கூறினார்.

# திருவாரூர் அரசுப் பள்ளியில் பாம்பு தீண்டிய 11ம் வகுப்பு மாணவன் உயிரிழப்பு



திருவாரூர், பிப்.9-

அரித்துவாரமங்கலம் அரசு மேல்நிலைப்பள்ளியில் பாம்பு தீண்டி சிகிச்சை பெற்று வந்த 11ஆம் வகுப்பு மாணவன் இன்று (பிப்.8) உயிரிழந்தார்.

திருவாரூர் மாவட்டம் அரித்துவாரமங்கலம், சேத்தனூரைச் சேர்ந்தவரும் விவசாயியுமான முருகானந்தம் ராதா. இந்த தம்பதியினரின் மகன் சிவப்பிரகாசம்(17). இவர், அரித்துவாரமங்கலம் அரசு மேல்நிலைப்பள்ளியில் 11ம் வகுப்பு படித்து வருகிறார்.

சிவப்பிரகாசம், கடந்த பிப்.4ம் தேதி வழக்கம் போல் பள்ளிக்குச் சென்றார். பின்னர் மதியம் இடைவேளையின் போது, உணவு சாப்பிடுவதற்காக தான் கொண்டு வந்த உணவுப்பையில் இருந்த டிபன் பாக்ஸை வெளியே எடுக்கும் போது, அதில் இருந்த கட்டுவிரியன் பாம்பு, சிவப்பிரகாசத்தை தீண்டியதாக போலீஸார் தெரிவித்தனர்.

இதையறிந்த அந்தப் பள்ளி ஆசிரியர்கள், அவரது பெற்றோருக்கு தகவல் அளித்தனர். பின்னர், சிவப்பிரகாசம் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு தொடர்ந்து அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி இன்று (பிப்.8) உயிரிழந்தார்.

அவரது உறவினர்கள், பள்ளி வளாகத்திற்குள் இருக்கும் அறையில் இருந்த புத்தகத்தை வெளியில் எடுக்கும் போது, அதில் இருந்த கட்டுவிரியன் பாம்பு தீண்டியதாக குற்றம்சாட்டியுள்ளனர். எனவே, இது தொடர்பாக அரித்துவாரமங்கலம் போலீஸார் வழக்கு பதிந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

# திருவள்ளூர் அருகே பரபரப்பு; கூவம் ஆற்றில் 3 கற்சிலைகள் மீட்பு: வேடிக்கை பார்க்க மக்கள் திரண்டனர்

திருவள்ளூர்:, பிப்.9-

திருவள்ளூர் அருகே சத்தரை கிராமத்தில் செல்லும் கூவம் ஆற்றில் 3 கற்சிலைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளது. திருவள்ளூர் அடுத்த கடம்பத்தூர் ஒன்றியம் சத்தரை கூவம் ஆற்றில் இளைஞர்கள் குளித்துக்கொண்டிருந்தனர். அப்போது ஆற்றில் பழங்கால 3 கற்சிலைகள் ஆங்காங்கே கிடப்பது கண்டு உடனடியாக கிராம மக்களுக்கு தகவல் கொடுத்துள்ளனர். இந்த தகவல் பரவியதும் சத்தரை, கடம்பத்தூர், மப்பேடு, கீழச்சேரி, கூவம், பேரம்பாக்கம், சிற்றம்பாக்கம், நரசிங்கபுரம். உள்பட சுற்றுவட்டாரப் பகுதிகளில் இருந்து பொதுமக்கள் திரண்டு வந்ததால் பெரும் பரபரப்பு நிலவியது.இதுகுறித்து தகவல் கிடைத்ததும் திருவள்ளூர் தாசில்தார் பாலாஜி உத்தரவின்படி, வருவாய்துறை அதிகாரிகள் சென்று கூவம் ஆற்றில் ஆய்வு செய்து ஆங்காங்கே கிடந்த சுமார் 3 முதல் 4 அடி உயரம் கொண்ட பழங்கால கற்சிலைகளை மீட்டனர். பின்னர் அந்த சிலைகளை திருவள்ளூர் தாசில்தார் அலுவலகத்தில் உள்ள காப்பகத்தில் பத்திரமாக வைத்தனர்.இந்த சிலைகளின் பெயர் என்ன, எந்த காலத்து சிலைகள் என்பது போன்ற விவரங்கள் தெரியவில்லை. இவற்றை ஆய்வு செய்த பின்னர்தான் கற்சிலையின் ஆண்டுகள் தெரியவரும் என்று தாசில்தார் பாலாஜி தெரிவித்துள்ளார். கடந்த மாதம் திருவள்ளூர் அடுத்த பிஞ்சிவாக்கம் கூவம் ஆற்றில் 50 கற்சிலைகள் கண்டெடுக்கப்பட்டது. தற்போது மீண்டும் சிலைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளதால் கூவம் ஆற்றில் மேலும் சிலைகள் இருக்கலாம் என்று தெரிகிறது.

# “விஜய்யின் அரசியல் வருகை திமுகவின் வாக்குகளையே பாதிக்கும்” டிடிவி.தினகரன்




கும்பகோணம், பிப்.9-

“விஜய்யின் அரசியல் வருகை திமுகவின் வாக்குகளை பாதிக்கும். அது என்டிஏ கூட்டணிக்கு மிகவும் சாதகமாக இருக்கும். அதனால் தான் அவர் வந்ததில் இருந்து நான் வரவேற்றுக் கொண்டிருக்கிறேன்” என அமமுக பொதுச்செயலாளர் டிடிவி. தினகரன் தெரிவித்தார்.

கும்பகோணத்தில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற அம்மா மக்கள் முன்னேற்ற கழக பொதுச்செயலாளர் டிடிவி.தினகரன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: அதிமுக, பாஜக கூட்டணிக்குள் இன்னும் பல்வேறு கட்சிகள் வரவேண்டி உள்ளது. கூட்டணி உறுதி செய்யப்பட்ட பிறகு சுமுகமாக தொகுதிப் பங்கீடு நடைபெற்று, வரும் 2026 தேர்தலை ஒற்றுமையாக சந்தித்து தமிழகத்தில் என்டிஏ கூட்டணி வெற்றி பெற்று அதிமுக தலைமையில் ஜெயலலிதா ஆட்சி அமையும். வரும் தேர்தலில் 200 தொகுதிகளுக்கு மேல் உறுதியாக வெற்றி பெறுவோம்.

திமுகவில் உள்ள குழப்பத்தால், அங்குள்ள கூட்டணி கட்சிகள் தொடர்ந்து நீடிக்குமா என திரிசங்கு சொர்க்கத்தில் இருக்கின்றது. தமிழகத்தில் ஊழல் பெருக்கெடுத்து ஓடுகிறது, போதையில் பள்ளி மாணவர்கள், பள்ளியிலேயே கஞ்சா உபயோகப்படுத்துகின்ற அளவுக்கு சட்டம் ஒழுங்கு திமுக ஆட்சியில் கெட்டு போய் விட்டது.

தமிழகம் போதைப் பொருள் பன்னாட்டு சந்தையாக மாறிவிட்டது. போலீஸாரே கஞ்சா விற்பனை செய்யும் நிலை ஏற்பட்டுவிட்டது. திமுக அரசு, விவசாயிகளை, அரசு ஊழியர்களை ஏமாற்றுவது போல், மக்களையும் ஏமாற்றுகிறார்கள். கடந்த தேர்தலில் அளித்த வாக்குறுதிகளில் 90% நிறைவேற்றாமல் ஏமாற்றி வருகிறார்கள்.

ஒரு குடும்பம் ஆட்சியை கையில் வைத்துக்கொண்டு தமிழகத்தை சுரண்டிப் பிழைக்கிறது. தமிழகத்தில் குழந்தைகள் முதல் முதியவர்களை வரை யாருக்கும் பாதுகாப்பு இல்லை. கொலை, கொள்ளை தான் நடக்கிறது. உறவினர்கள்,நண்பர்கள், அரசியலில் இருப்பவர்களுக்கு அழைப்பு கொடுப்பது நட்பு ரீதியாக, உறவு ரீதியாகத் தான். அவர்கள் வரவில்லை என்றால் நம் பொறுப்பு இல்லை. அவர்கள் தனித்து விடப்படப் போகிறார்கள்.

கடந்த சட்டப்பேரவை தேர்தலில் நாங்கள் தனித்து போட்டியிட்டதால், திமுகவிற்கு வெற்றிக்கான வாய்ப்பு ஏற்பட்டது. ஆனால் இந்த முறை வாய்ப்பில்லை. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிறது. மக்களை விலைகொடுத்து வாங்கி விடலாம் என ஊழல் பணத்தை தின்று கொழுத்தவர்கள், வரிப்பணத்தை ருசித்தவர்கள் ரூ. 3 ஆயிரம் கொடுத்து வாங்கி விடலாம் என கங்கனம் கட்டிக்கொண்டு திரிகிறார்கள்.

இன்னும் சில கட்சிகள், வேட்பாளர்களை தேடி அலைகின்றனர். மற்ற கட்சி வேட்பாளர்களை ரூ.10 கோடி தருகிறோம் என ஏமாற்றுகிறார்கள். கட்சி என்று வரும் போது உறவுக்கு வேலை இல்லை. தேசிய ஜனநாயக கூட்டணி உள்ள அனைவரும் சரியாக உள்ளார்கள். அதனால் இந்தக் கூட்டணி மாபெரும் வெற்றி பெறும்.

பழனிசாமி அறி வித்துள்ள தேர்தல் அறிவிப்புகளை 5 ஆண்டுகளில் உறுதியாக நிறைவேற்றுவார். ஆனால் திமுகவின் வாக்குறுதி டுபாக்கூர் வாக்குறுதிகள். 2006ல் விஜயகாந்த் வந்த போது எப்படி பாதிப்பு இருந்ததோ, அதே போன்ற பாதிப்பு பல கட்சிகளுக்கு இருக்கும். ஆனால் விஜய் வந்திருப்பதின் மூலம் அதை விட அதிகமான பாதிப்பு இருப்பதற்கான சூழ்நிலை தற்போது இருப்பதாக கூறப்படுகிறது.

விஜய்யின் அரசியல் வருகை திமுகவின் வாக்குகளை பாதிக்கும். அது என்டிஏ கூட்டணிக்கு மிகவும் சாதகமாக இருக்கும். எங்களுக்கு எந்த பாதிப்பும் இருக்காது. எங்கள் வெற்றிக்கு உறுதியாக உதவி செய்யும். அதனால் தான் அவர் வந்ததில் இருந்து நான் வரவேற்றுக் கொண்டிருக்கிறேன் எனத் தெரிவித்தார்.



# சங்கரன்கோவில் சங்கரநாராயணசுவாமி கோவிலில் தெப்பத் தேரோட்ட திருநாள்

தென்காசி, பிப்.9-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில், சங்கரநாராயண சுவாமி கோவிலில் ஆண்டு தோறும் தை மாத கடைசி வெள்ளிக் கிழமை தெப்பத் தேரோட்ட திருநாள் சிறப்பாக கொண்டாடப்படும். இந்நிகழ்ச்சியில் ஓடை தெரு ஆவுடை பொய்கை தெப்பம் எதிரே அமைந்துள்ள மண்டபத்தில் மாலையில் சுவாமி,அம்பாள் எழுந்தருளினர். தொடர்ந்து சுவாமி, அம்பாளுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்கார தீபாராதனை நடை பெற்றது. பின்னர் இரவில் சுவாமி அம்பாள் அலங்கரிக்கப்பட்ட தெப்பத் தேரில் எழுந்தருளி, 11 முறை தெப்பத்தில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.

இவ்விழாவில் ராஜா எம். எல்.ஏ., சங்கரன்கோவில் நகராட்சி தலைவி கௌசல்யா வெங்கடேஷ் உள்பட திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். விழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாகம் மற்றும் மண்டகப்படிதாரர்கள் செய்திருந்தனர்.



# திசையன்விளை காவல் நிலைய வளாகம் பால சித்தி விநாயகர் கோயில் வருஷாபிஷேக விழா

திசையன்விளை.பிப்,9-

திசையன்விளை காவல் நிலைய வளாகத்தில் அமைந்துள்ள பால சித்தி விநாயகர் கோவில், பிரசித்தி பெற்ற கோவிலாகும். இக்கோவிலில் வருஷாபிஷேக விழா நேற்று காலை மங்கள இசையுடன் தொடங்கியது. பின்னர் கணபதி ஹோமம் உட்பட பல்வேறு ஹோமங்கள் நடைபெற்றது. பின்னர் திரவிய அபிஷேகம், விமான அபிஷேகம், பால சித்தி விநாயகர்க்கு கும்பாபிஷேகம் மற்றும் சிறப்பு அலங்கார பூஜை நடைபெற்றது.

விழாவில் தொழில் அதிபர்கள், நகர பிரமுகர்கள், காவல்துறை யினர் அரசு போக்குவரத்து கழக பணியாளர்கள் கலந்து கொண்டனர். அன்னதானம் நடைபெற்றது. மாலையில் திருவிளக்கு பூஜை, பால சித்தி விநாயகருக்கு புஷ்பாஞ்சலி, சகஸ்ரநாம அர்ச்சனை, தீபாராதனை நடந்தது, பின்னர் பிரசாதம் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாகி ஓய்வுபெற்ற காவல் அதிகாரி சுந்தர பெருமாள் மற்றும் குழுவினர் செய்திருந்தனர்.



■ திருப்பூர் மாவட்டம் அவிநாசி பழங்கரையில் கறிக்கோழி முத்தரப்பு பேச்சுவார்த்தை உடனடியாக நடத்தகோரி, மாபெரும் ஒரு நாள் அடையாள உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது.

# மேலப்பனங்காடி அய்யனார் முனியாண்டி கருப்பசாமி முத்துமாரியம்மன் பூர்ணா புஷ்களா சமேத தர்ம சாஸ்தாதிருக்கோவில் கும்பாபிஷேகம்

அலங்காநல்லூர். பிப்.09-

மதுரை மாவட்டம் குலமங்கலம் அருகே உள்ள மேலப்பனங்காடி கிராமத்தில்

ஸ்ரீ அய்யனார், முனியாண்டி, கருப்புசாமி, முத்துமாரியம்மன், பூர்ணா புஷ்களாசமேத தர்ம சாஸ்தா திருக்கோவில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்த விழாவில் முதல் நாள் யாக வேள்வி பூஜையில் கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், லட்சுமி ஹோமம், பூர்ணாஹூதி மங்கல இசை முழங்க கோபூஜை, கணபதி பூஜை மற்றும் தீபாதாரணையும் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து இரண்டாம் நாள் காலை மங்கல இசை முழங்க மகா பூர்ணாஹூதி, தீபாராதனை



நடைபெற்றது. ராமேஸ்வரம், அழகர்கோவில், காசி, கங்கை, உள்ளிட்ட திருத்தலங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித நீர் மேளதாளங்கள் முழங்க யாகசாலையை சுற்றி வலம் வந்து கோபுர உச்சிக்கு கொண்டு செல்லப்பட்டு வேத மந்திரங்கள் முழங்க கருடன் வானத்தில் வட்டமிட கலசத்தில் புனித நீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து கும்பாபிஷேக விழாவிற்கு வருகை தந்த உள்ளூர் மற்றும் சுற்று வட்டார கிராமத்தை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பூஜை மலர்களும் அறுசுவை அன்னதானமும் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை மேலப்பனங்காடி கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்.

# 95% மேல் மதிப்பெண் பெற்றால் விமானத்தில் 2 நாள் இன்ப சுற்றுலா

திசையன்விளை. பிப்.9-


நெல்லை மாவட்டம் செட்டிகுளம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 56வது ஆண்டு விழா நடைபெற்றது. இந்த பள்ளி ஆண்டு விழாவில் சிறப்பு விருந்தினராக முன்னாள் எம்.பியும், நெல்லை புறநகர் மாவட்ட கழக அதிமுக பொருளாளரும், பள்ளியின் முன்னாள் மாணவருமான சௌந்தர்ராஜன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பள்ளி மாணவர்களுக்கு அறிவுரையும் ஆலோசனைகளையும் வழங்கினார்.




ஆண்டு விழாவிற்கு பள்ளி தலைமை ஆசிரியர் டாக்டர் பேசில் ககாரின் தலைமை தாங்கினார். மாணவர்களுக்கு பரிசு வழங்கி சௌந்தர்ராஜன் பேசுகையில் ஒழுக்கத்தோடு சேர்ந்த கல்வி தான் வாழ்க்கையின் பெரும் முன்னேற்றத்திற்கு வழிவகையாக இருக்கும். அரசுப் பள்ளியில் பயிலும் மாணவர்களின் குலசாமியாக திகழ்ந்தவர் எடப்பாடியார். தமிழக முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ஆன எடப்பாடி பழனிச்சாமி கொண்டு வந்த 7.5% சதவீத மருத்துவ உள் ஒதுக்கீட்டில் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் எந்தவித செலவுமின்றி மருத்துவம் படித்து வருகின்றனர். 7.5% சதவீத மருத்துவ உள் ஒதுக்கீட்டில் மருத்துவம் படித்து வருபவர்கள் ஐந்து கோடி ரூபாய் தங்களது பெற்றோர்களுக்கு சேமித்து கொடுத்துள்ளனர்.

அரசு பள்ளியில் படிக்கும் மாணவர்கள் பலர் மருத்துவராக வேண்டும் என்கிற கனவை நினைவாக்கி அவர்களின் குலசாமியாகவே எடப்பாடி பழனிசாமி திகழ்கிறார். திருநெல்வேலி மாவட்டத்தில் பெருந்தலைவர் காமராஜர் விருது பெற்ற ஒரே பள்ளி நமது செட்டிகுளம் அரசு மேல்நிலைப்பள்ளி. இந்த ஆண்டில் இப்பள்ளியில் பயிலும் பத்தாம் வகுப்பு மாணவர்களாகிய நீங்கள் நடைபெற இருக்கும் பொதுத் தேர்வில் 95 சதவீதத்திற்கு மேல் மதிப்பெண் பெருகின்ற அனைவரையும், பன்னிரண்டாம் வகுப்பில் முதலிடம் வருபவர்களும், ஏதாவது ஒரு பாடப்பிரிவில் நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெற்றிருந்தாலோ அந்த மாணவ மாணவியரை தன்னுடைய சொந்த செலவில் விமானத்தில் இரண்டு நாள்கள் இன்ப சுற்றுலா அழைத்து செல்வேன் எனவும் முன்னாள் எம்.பி சௌந்தர்ராஜன் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பள்ளி மேலாண்மை குழு தலைவர் த.கலைவாணி, பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள் செல்வபாண்டி, காண்டீபன், முன்னாள் மாணவர் சங்க நிர்வாகிகள் கண்ணன், யேசுதுரை மற்றும் நிர்வாகிகள், பள்ளி மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர். பள்ளி மேலாண்மை குழு நிர்வாகி சுவாமிநாதன் நன்றியுரை வழங்கினார். நல்லாசிரியர் ஜேசு வரவேற்புரையாற்றினார். கலை நிகழ்ச்சிகளை ஆசிரியை பியூலா தொகுத்து வழங்கினார்.



# அகரம் பேரூராட்சி மின் விபத்து இழப்பீடு தொகை ரூ.10லட்சத்தை உயிரிழந்த குடும்பத்தினருக்கு அமைச்சர் ஐ.பெரியசாமி வழங்கினார்

சின்னாளபட்டி, பிப். 9-

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் தொகுதி அகரம் பேரூராட்சி 13வது வார்டு பாப்பனம்பட்டியை சேர்ந்த மாரியப்பன் அவர்கள் மனைவி விக்ரம்மாள் கடந்த 9 மாததிற்கு முன்பு தோட்டத்தில் பசுமாடு மேய்த்துக் கொண்டிருந்த போது மின் வயர் அறுந்துவிழுந்த மின் விபத்தில் சிக்கி இறந்துபோனார். பசுமாடும் இறந்து போனது இதை கேள்விபட்ட ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, தமிழக முதல்வரின் மின் விபத்து இழப்பீடு தொகைக்கு சிபாரிசு செய்ததன் பேரில், இறந்துபோன விக்ரம்மாள் குடும்பத்தினருக்கு இழப்பீடு தொகை ரூ.10லட்சத்திற்கான காசோலையை மின்சாரதுறை மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, இறந்துபோன விக்ரம்மாள் கணவர் மாரியப்பன் மற்றும் அவருடைய மகன் சசிக்குமாரிடம் ரூ.10லட்சத்திற்கான காசோலையை வழங்கினார்.

அப்போது பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் விபத்து இழப்பீடு தொகையை உடனடியாக வழங்கி வருவது திமுக அரசு என்றதோடு அது மின் விபத்தாக இருந்தாலும் சரி, காட்டு மாடுகள், யானைகள் தாக்கியிருந்தாலும் சரி உடனடியாக பாதிக்கப்பட்டோருக்கு நிவாரண உதவித்தொகை வழங்கி அவர்களது குடும்பத்தை காப்பாற்றி வருவத முத்தமிழ் அறிஞர் கலைஞர் வழியில் வந்த திராவிட மாடல் ஆட்சி நாயகன் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திமுக அரசு என்றார். தனது குடும்ப நலன் கருதி தங்களுக்கு நிவாரண உதவி வழங்க ஏற்பாடு செய்த ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு மாரியப்பன் கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தார். நிகழ்ச்சியின் போது திண்டுக்கல் மின் திட்ட மேற்பார்வை பொறியாளர் (பொறுப்பு) சாந்தி, செயற்பொறியாளர் வடக்கு ஏ.நாகராஜன், தாடிக்கொம்பு உதவி பொறியாளர் காஜாமைதீன், திமுக மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் கும்மம்பட்டி விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, அகரம் பேரூராட்சிமன்ற தலைவர் நந்தகோபால் (எ) மணி, மின்வாரிய தொ.மு.ச. வடக்கு கோட்ட செயலாளர் வின்சென்ட், மாநில அமைப்பு செயலாளர் மீனாட்சி சுந்தரம், மாவட்ட துணைச்செயலாளர் பாறைப்பட்டி ஆர்.சதீஸ், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், ஒன்றிய பிரதிநிதியும் வார்டு உறுப்பினருமான என்.கண்ணன் மற்றும் 7வது வார்டு திமுக நிர்வாகிகள் உட்பட பலர் உடனிருந்தனர்.



■ மதுரை மாவட்டம், டாக்டர்.எம்.ஜி.ஆர். விளையாட்டரங்க வளாகத்தில் உள்ள சர்வதேச ஹாக்கி விளையாட்டு மைதானம், புதிதாக அமைக்கப்பட்டு வரும் நீச்சல்குளம், நவீன உடற்பயிற்சி கூடம், மாற்றுத்திறனாளிகளுக்கான உடற்பயற்சி கூடம் மற்றும் விளையாட்டு அரங்கம், புதிதாக அமைக்கப்பட்டு வரும் கபடி அரங்கத்தின் கட்டுமான பணி, விளையாட்டு விடுதி, மாணவர்களிடம் வழங்கப்படும் உணவு குறித்து கேட்டறிந்து, விடுதியை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை முதன்மை செயலாளர் சத்யபிரதசாகு ஆய்வு செய்து பார்வையிட்டார். மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், மண்டல முதுநிலை மேலாளர் வேல்முருகன், மாவட்ட விளையாட்டு அலுவலர் இராஜா ஆகியோர் உடன் உள்ளனர்.

# காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தானுக்கு உமர் அப்துல்லா பதிலடி

ஸ்ரீநகர், பிப்.9-

காஷ்மீர் ஒற்றுமை தினத்தையொட்டி, பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் ஆக்கிரமிப்பு காஷ்மீர் சட்டப்பேரவையில் பேசினார்.



அப்போது, "பாகிஸ்தான் மக்கள் சார்பில் காஷ்மீரில் உள்ள எங்கள் சகோதரர்களுடன் ஒற்றுமையாக நிற்க நான் இங்கு வந்துள்ளேன். முகமது அலி ஜின்னா காஷ்மீரை பாகிஸ்தானின் 'கழுத்து நரம்பு' என்று அறிவித்ததை நினைவு கூர்கிறேன். எனவே, ஒரு நாள் காஷ்மீர் பாகிஸ்தானின் ஓர் அங்கமாக மாறும்" என்று தெரிவித்தார்.

இதுகுறித்து ஜம்மு காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா கூறும்போது, "காஷ்மீர் பாகிஸ்தானுடன் இணையப் போகிறதா? ஏற்கெனவே அவர்களிடம் இருக்கும் நிலப் பகுதியையே அவர் களால் சமாளிக்க முடியவில்லை. எங்களை வைத்துக் கொண்டு அவர்கள் என்ன செய்வார்கள்?" என்று கேட்டார்.










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000